அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எண்ணிக்கை சிறிதாக இருந்தாலும் அங்குள்ள விவசாயிகள் இந்த வழக்குகள் நீண்ட நாட்களாக இருப்பதால் அவர்கள் குத்தகை நிலத்தை விட்டுச் செல்கிற சூழ்நிலையெல்லாம் ஏற்பட்டிருக்கிறது என்பதால் இதைத் தீர்த்து வைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எட்டு, பத்து ஆண்டுகள் என்று சொன்னார்கள். எட்டு, பத்து ஆண்டுகள் என்பது நீண்டகாலம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். மிகக் குறுகிய காலத்தில் அதை முடிக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும்படி அறிவுறுத்தப்படும்.

(திரு. என். பழனிவேல் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் கேள்விகள் கேட்கவேண்டும் என்றால் எப்படி முடியும்? மற்ற நிகழ்ச்சிகளுக்கும் வாய்ப்புத் தரவேண்டும். என்ன செய்வது? எல்லோரையும் கூப்பிட வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை.

நகர்புற நில உச்சவரம்புச் சட்டம்

*வினா எண் 180—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் இதுவரை சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில், கைப்பற்றப்பட்ட நிலங்களின் அளவு என்ன?

(ஆ) அவைகள், எந்தெந்த வகையில் விநியோகிக்கப் பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நிலங்களைக் கைப்பற்றும்போது அரசு எவ்வளவு தொகை கொடுக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நகர்புற உச்சவரம்பில் வகை I, II, III, என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. சென்னை வகை 'I' பிரிவைப் பெறுகிறது. சேலம், கோவை, திருச்சி, மதுரை, வகை 'II' பிரிவில் வருகிறது. திருநெல்வேலி வகை 'III' பிரிவில்

[1978 செப்டம்பர் 13]

வருகிறது. அப்படி வருகிறபோது அந்தந்த நகர்ப்புறங்களுக்குத் தக்கபடி அவர்களுக்கு அந்தக் கிரயத்தை நாங்கள் நிர்ணயம் செய்கிறோம். சென்னை என்றால் not exceeding Rs. 50 per square metre சேலம், கோவை, திருச்சி, மதுரை, இவற்றில் not exceeding Rs. 25 per square metre. திருநெல்வேலியில் ஒரு சதுர மீட்டருக்கு 15

[முற்பகல் 9-20]

ரூபாய்க்கு மேற்படாமல் ஆனால், இந்தப் பணத்தைக் கொடுப்பதில் அதாவது நிலச் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதில் அவர்களுக்கு 25 சதவீதம் பணத்தை உடனடியாகக் கொடுக்கிறோம். இதில் 25 சதவீதம் அல்லது 25 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் 25 சதவீதம் உடனடியாகப் பணம் கொடுக்கப்படுகிறது. மீதிப் பணம் 15 ஆண்டுகளில் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்படுகிற பணத்திற்கு 6 சதவீதம் வட்டியும் கொடுக்கப்படுகிறது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களில் இந்தச் சட்டம் வந்ததின் காரணமாக இதுவரை எந்த நிலமும் கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மிச்ச நிலம் கிடைக்கவில்லையாதலால் டிஸ்ட்ரிபூஷன் என்ற கேள்விக்கு இடமில்லை. இப்படி மிச்ச நிலம் இல்லாத போது. . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மிச்ச நிலம் இல்லை என்று சொல்லவில்லை. மிச்ச நிலம் இன்னும் வரவில்லை. இதற்கான காலக்கெடு 121 நாட்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. 14-9-78 வரை கெடு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று 120 நாளாகிறது. 121 நாட்கள் ஆவதற்கு இன்னும் ஒரு நாள் இருக்கிறது. கடைசி நேரம் வரையில் காத்திருந்து விட்டு அதற்குப்பின் தான் கணக்கைக் கொடுப்பார்கள். ஆனால், அவர்கள் கொடுத்ததை எல்லாம் சரிதானா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்துவிட்டு எவ்வளவு நிலம் எந்தெந்த நகரங்களில் கிடைத்திருக்கின்றன என்று கணக்கெடுக்க வேண்டும். அப்படிக் கணக்கு எடுத்த பின்னால் நிலச் சொந்தக்காரர்களுக்கு உங்களுடைய நிலம் இவ்வளவு எடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். ஆகவே, கணக்கு வருவதற்கு இன்னும் காலக்கெடு இருக்கிறது, இன்னும் 24 மணி நேரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.